புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | ஜூன் 21, 2018 | புரட்சி 17 | முழக்கம் 23 | விலை: ரூ.3.00

# ஈழத்தில் நடந்தது உள்நாட்டுப் போர் அல்ல; இன அழிப்பில் சர்வதேச சதி அடங்கியுள்ளது

# சென்னையில் கூடிய பன்னாட்டு வழக்கறிஞர்கள் மாநாடு விவாதம்

***சர்வதேச தமிழ்நாட்டு வழக்கறிஞர்கள், முன்னாள் நீதிபதிகள் மாநாடு சென்னையில் கடந்த ஜூன் 9ஆம் தேதி கூடி ஈழத் தமிழர் இன அழிப்பை சர்வதேச சட்டங்களின் வெளிச்சத்தில் விரிந்த தளத்தில் முன்னெடுப்பதற்கான சாத்தியக் கூறுகளை விவாதித்தது.***



தமிழ்நாடு, சென்னையில் பிட்டி. தியாகராயர் அரங்கில், ஜூன் 9 ஆம் நாள், அனைத்துலக ஈழத் தமிழர் உரிமை மையம் என்ற அமைப்பின் பெயரில், ஈழத்தமிழர் ஆதரவு வழக்கறிஞர்கள் கூட்டமைப்பு என்ற தலைப்போடு, ஈழத்தமிழர்களுக்கு நீதி வேண்டி பன்னாட்டு வழக்கறிஞர்கள் மாநாடு நடந்தேறியது. ஓய்வு பெற்ற நீதிபதி து. அரிபரந்தாமன் அவர்களின் தலைமையில், தமிழகம், ஈழம், மற்றும் இந்தியா வினுள் உள்ள பிற மாநிலங்கள் உட்பட சர்வதேச நாடுகளில் இருந்தும் வழக்குரைஞர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். ஈழத் தமிழர் களுக்கான குற்றவியல் நீதியும், ஈடுசெய் நீதியும் மறுக்கப்படக்கூடாது, இலங்கையே தன்னைத் தானே விசாரித்துக்கொள்ளும் உள்ளக விசாரணை முற்றிலும் நிராகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் மாநாட்டு அழைப்பிதழில் இடம் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

2009 இல், ஈழத்தில் நடந்த இனவழிப்புப் போரின் தொடக்கம் முதல், இலங்கைப் பேரினவாத அரசு ஈழத்தின் மீது தொடுத்துக்கொண்டிருந்த போரினை நிறுத்த வலியுறுத்தி தமிழகம் எங்கும் எழுந்த போர்க்குரலிலும் போராட்டங்களின் அனைத்து வடிவங்களிலும் பெரும் பங்காற்றிய தமிழக வழக் குரைஞர்களை இம்மாநாட்டை ஒருங்கிணைந்து முன்னெடுத்திருந்தார்கள்.

2009 பிப்ரவரி மாதம், சென்னை உயர்நீதி மன்ற வளாகத்தில், காவல்துறையால் தாக்கப்பட்ட வழக் குரைஞர்கள், ஓய்ந்திடாது, தமிழர்களின் உரிமைக் குரலின் வடிவமாய் மீண்டும் ஒலிக்க ஆரம்பித்திருப் பது பல மட்டங்களிலும் பாராட்டப் படுகிறது.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர், தொல்.திருமாவளவன், சென்னை உயர்நீதி மன்றத்தின் ஒய்வு பெற்ற நீதிபதிகள் கே.பி. சிவசுப்ரமணியம், ஏ.கே, ராஜன், ஜி.எம் அக்பர் அலி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகவும், ஈழத்தில் இருந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோடு சேர்ந்தியங்கும் இளம் வழக்குரைஞர் சுகாஷ், சி.சந்திரலீலா, இலண்டனில் இருந்து வழக்குரைஞர் பரமலிங்கம், மலேசியாவில் இருந்து மகா ராமகிருஷ்ணன், ஆஸ்திரேலியாவில் இருந்து ரெபேகா எலிம் ஆகிய பெண் வழக்குரைஞர்கள் சிறப்பு உரையாற்றிய இம் மாநாட்டில், வழக்குரைஞர்கள் காலின் கான்ஸ்லாவல் (புதுடெல்லி), வி. சுரேஷ், பாரிவேந்தன்(புதுடெல்லி), ,கோலார் தங்கவயல் ஜெ.ஜெயராஜ், எஸ், ரஜினிகாந்த், கே.பாலு, டி. பானுமதி, இரா.கிருஷ்ணகுமார் உள்ளிட்டோர் சிறப்பு பங்கேற்பாளர்களாக கலந்துகொண்டு உரையாற்றினர்.

சானல்4 இன் ஆவணப்பட இயக்குநர் கால்லம் மெக்ரே காணொளி மூலம் பேசிய இம்மாநாட்டில் ஈழத்தில் நடந்தது இன அழிப்பு என்பதனை ஆதாரப்பூர்வமான உரை மூலம் எடுத்து இயம்பினார்.

சானல்4 இல் வெளிவந்த ஈழப்போர் குறித்த ஆவணப்படங்கள் ஈழத்தில் நடந்தேறியவை இன அழிப்புதான் என்பதனை நிரூபிக்கும் சாட்சியங்கள் தான் எனினும் பொதுவெளியில் 'இனவழிப்பு' என்ற வார்த்தையை கால்லம் மெக்ரே இதுவரை பயன்படுத்தாது தவிர்த்தே வந்தார் என்றும் சட்டத்தரணிகளும் நீதி அரசர்களும் வீற்றிருந்த மேடையில், வழக்குரைஞர்கள் நிரம்பிய அறையில், ஈழத்தில் நடந்தது இனவழிப்புத்தான் என்று அவர் பேசியதும் அவரது மாற்றமும் புதிது என, இதனைப் பார்வையாளர்கள் வரிசையில் இருந்து கவனித்த தமிழக ஊடகவியலாளர் சுட்டிக்காட்டினர்.

மலேசியாவில் இருந்து வந்திருந்த வழக்குரைஞர் மகா ராமகிருஷ்ணன் அவர்களின் உரையில்,

பன்னாட்டு சட்ட விதிகளை ஆதாரமாகக் கொண்டு பார்க்கும் போது ஈழத்தமிழர்களின் ஆயுதப் போராட்டம் ஒரு சர்வதேசப் போர். ஆனால், ஜெனீவாவை மையப்படுத்தி நடைபெறும் மனித உரிமை மன்றம் இதை அவ்வாறு பார்க்காது ஒரு உள் நாட்டுப் போராக மட்டுப்படுத்தி இலங்கை ஒற்றையாட்சி அரசுக்குள் நிலை மாறு கால நீதி என்ற பொறிக்குள் தள்ளிவிட்டிருக்கிறது.

“ஈழத்தில் நடந்த போர், சிங்கள அரசிற்கும் ஈழத்திற்கும் இடையிலான ஈழ தேசத்தின் மீதான உரிமைக்கானது எனினும், இது சர்வதேச மையங்கள் ஆக்கிரமித்த போர். ஈழத்தமிழர்கள் நடத்தியவை பிரிவினைக்கான போரே அல்ல, தங்கள் தேசத்தின் விடுதலையை மீட்டெடுக்கும் போர். இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இந்துமா கடலின் தீவினை ஆளும் பொறுப்பை சிங்கள ஆதிக்கத்தின் கையில் கொடுத்து, ஈழத்தமிழர்களின் தேசிய உரிமையை மறுத்து, தமிழர்களின் இறையாண்மையை பறித்து, பிரித்தானிய அரசு செய்த பிழையை, அவர்களே திருத்த வேண்டியது அவசியம். 80களின் இறுதியில் இராணுவ பலத்தோடு ஈழத்திற்குள் நுழைந்த இந்தியா, போர் சம வலுநிலையின் பின் உருவான அமைதிப் பேச்சுவார்த்தைக் காலத்தில் நுழைந்த நோர்வே அரசு, இவர்களோடு இணைத்தலைமை வகித்த அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், பிரித்தானியா உள்ளிட்ட நாடுகளும் ஈழத்தில் நடந்தவைகளுக்கான பொறுப்பேற்க வேண்டிய நாடுகள்” என்று எடுத்துரைத்தார்.

பன்னாட்டு சட்ட விதிகளை ஆதாரமாகக் கொண்டு பார்க்கும் போது ஈழத்தமிழர்களின் ஆயுதப் போராட்டம் ஒரு சர்வதேசப் போர் என்று அவர் வாதிட்டார். ஆனால், ஜெனீவாவை மையப்படுத்தி நடைபெறும் மனித உரிமை மன்றம் இதை அவ்வாறு பார்க்காது ஒரு உள் நாட்டுப் போராக மட்டுப்படுத்தி இலங்கை ஒற்றையாட்சி அரசுக்குள் நிலை மாறு கால நீதி என்ற பொறிக்குள் தள்ளிவிட்டிருக்கும் நிலையைக் குறிப்பாக கவனிக்குமாறு அவர் வல்லுநர்களை வேண்டிக்கொண்டார்.

காரன் பார்க்கர் மற்றும் பிரான்சிஸ் பொய்ல் போன்றவர்கள் ஏற்கனவே வெளியிட்டிருக்கும் கருத்துக்களுடன் டப்ளின் தொடக்கம் ப்ரேமன் வரை நடந்தேறிய மக்கள் தீர்ப்பாயத்தின் தீர்ப்பு ஆகியவற்றையும் கருத்தில் கொண்டு, தமிழர்களும் தமிழர்களுக்கு ஆதரவான நட்புச் சக்திகளும் ஒரு புதிய சர்வதேச சட்ட அத்தியாயத்தையே திறக்க வேண்டியிருக்கிறது என்று வலியுறுத்தினார்.

ஒரு திசையில் மட்டும் சிந்திக்காமல் சர்வதேச சட்டங்களின் பலவித பக்கங்களையும் தொட்டுச் செல்லும் வகையில் விரிவான ஓர் அணுகுமுறையை வகுத்துக்கொள்ளவேண்டும் என்ற கருத்தை அவர் வலியுறுத்தினார். அவரின் பேச்சு தமிழில் இருந்திருந்தால் விளங்குவதற்கு இலகுவாக இருந்திருக்கும் என்றும், ஆயினும் அவர் கொடுத்த விளக்கம் தமக்கு ஆர்வத்தைக் கூடியிருப்பதாகவும் இளம் வழக்குரைஞர்கள் கருத்து வெளியிட்டனர்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் பேசும்பொழுது,

ஒரு திசையில் மட்டும் சிந்திக்காமல் சர்வதேச சட்டங்களின் பலவித பக்கங்களையும் தொட்டுச் செல்லும் வகையில் அகலமான ஓர் அணுகுமுறையை வகுத்துக்கொள்ளவேண்டும்

“ஈழத்தில் நடந்த இனவழிப்பில், தொடர்ச்சியாக நாம் இந்தியாவின் பங்கைப் பற்றி மட்டுமே பேசுகிறோம். அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகளின் இராணுவமும் ஈழப்போரில் நேரடியாக பங்குக்கொண்டிருந்தன என்பதற்கான ஏராளமான சாட்சியங்களை பார்க்கிறோம். இவைகளை கேள்வி கேட்க வேண்டிய, அம்பலப்படுத்த வேண்டிய பொறுப்பு தமிழர்களாகிய நமக்கு இருக்கிறது. சர்வதேச மையப்படுத்தப்பட்ட ஈழப்போரில் நடந்த இனவழிப்பிற்கான நீதியை சர்வதேச சக்திகளின் துணை கொண்டு பெற போராடுவோம். உலகெங்கும் பரந்து விரிந்துள்ள தமிழர்கள் தொடர்ந்து நீதிக்கான குரலை ஓங்கி ஒலிக்க வேண்டும், இனவழிப்பு நடந்துள்ளதை நிறுவ வேண்டும், ஈழத்தின் தேசிய உரிமையை மீட்க ஓயாது போராட வேண்டும்," என்று எடுத்துரைத்தார்.

**நீதிபதி சிவசுப்ரமணியம்**

சென்னை உயர்நீதி மன்றத்தின் ஓய்வுப் பெற்ற நீதிபதி சிவசுப்ரமணியம் பேசும்பொழுது,

“2009 ஈழத்தில் போர் உச்சக்கட்டத்தில் இருந்த நேரத்தில் தமிழக அரசு சார்பாக நீதிபதிகள் மற்றும் வழக்குரைஞர்கள் உள்ளடக்கிய குழு ஒன்று டெல்லிக்கு பயணித்தோம். அதிகார மையங்களில் வீற்றிருந்த, போரை நிறுத்த வல்லமை உடைய அனைவரையும் சந்தித்து உடனடியான போர் நிறுத்தம் கொண்டு வர இந்திய அரசு முனைய வேண்டும் என வலியுறுத்தினோம். சோனியா உட்பட அனைவரையும் சந்தித்து முறையிட்டோம். ஆனால், அன்றைய வெளிவிவகாரத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி மட்டும் எவ்வளவு முயன்றும் எங்களை சந்திக்க மறுத்துவிட்டார்” எனத் தெரிவித்தார்.

(4ஆம் பக்கம்)

## ‘பசுமை’ வழிச்சாலையை எதிர்த்துப் பேசினாலே கைதா? கழகம் கண்டனம்

மத்திய அமைச்சர் நிதின் கட்கரி, சென்னை - சேலம் இடையே அரூர் வழியில் 8 வழி பசுமைச் சாலை அமையவிருப்பதாக அறிவித்துள்ளார். தமிழக முதல்வர் எடப்பாடியும் சட்டசபையில் அறிவித் துள்ளார். இதன் பின்னணி உள்நோக்கம் குறித்த ஒரு தகவல் சமூக ஊடகங்களில் உலா வந்துகொண்டிருக்கிறது.



▸ சேலம் மாவட்டம் அடிமலைபுதூர் பகுதியில், 8 வழி விரைவு பசுமைச்சாலைக்காக, விவசாய நிலத்தில் முட்டுக் கல் நடும் பணி போலீஸ் பாதுகாப்புடன் நேற்று நடந்தது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வாக்குவாதத்தில் ஈடுபட்ட மூதாட்டியை கைது செய்து அழைத்து செல்லும் போலீசார்.

இது குறித்து அந்த பதிவில்,

“மத்திய அமைச்சர் நிதின் கட்கரி, சென்னை - சேலம்இடையே அரூர் வழியில் 8 வழி பசுமைச் சாலை அமையவிருப்பதாக அறிவித்துள்ளார். இதன் மதிப்பீடு பத்தாயிரம் கோடி ரூபாய், தமிழ் நாட்டிற்கு எய்ம்ஸ் மருத்துமனை அமைக்காத, மருத்துவ கல்லூரி அமைக்காத மத்திய அரசு ஏன் புதிய சாலையமைக்க பத்தாயிரம் கோடியை செலவிடுகிறது என்று ஆராய்ந்தீர்களா?

அந்த பத்தாயிரம் கோடியும் மக்கள் வரிப்பணம் அமையவிருக்கும் சாலை யானது கார்ப்பரேட் நிறுவனமான ஜிண்டாலுக்காக. ஜிண்டால் என்ற ஒற்றை நிறுவனத்தின் தேவைக்காக தமிழர்களின் நிலமும், கனிம வளமும் களவாடப்பட இருக்கிறது, ஜிண்டால் தன் நிறுவனத்தின் மூலம் தமிழகத்தில் 7525 கோடி ரூபாயை புதிய திட்டங்களுக்கு ஒதுக்கி உள்ளது. அதில் முதன்மையான திட்டம் சேலம் மாவட்டத்தில் உள்ள கஞ்சமலையில் இருந்து இரும்புத் தாதுக்களை வெட்டி எடுப்பது.

இரண்டாவது, திருவண்ணாமலை மாவட்டம் கவுத்தி, வேதியப்பன் மலையில் இருந்து இரும்புத் தாதுக்களை வெட்டி எடுப்பது, இவ்விரண்டு திட்டத்தின் மூலம் கைப்பற்றும் இரும்புத்தாது வளங்களை வெளிநாடுகளுக்கு அதிவிரைவாக ஏற்றுமதி செய்ய வேண்டுமானால் சென்னை துறைமுகத்துக்குக் கொண்டுச் செல்ல வேண்டும்.

அதற்காகத்தான் மலைகளின் ஊடாக ஒரு அதி விரைவு சாலை அமைக்கிறார்கள். அது தான் இந்த சென்னை -சேலம் விமான சேவை மற்றும் 8 வழி பசுமைச் சாலை. இந்த சாலையின் மூலமாக சேலம்- சென்னைக்கு இடையிலான பயணதூரம் 60 கிலோ மீட்டர் குறையும். நம் வளங்கள் நம் வரிப் பணத்திலேயே களவு போக உள்ளது. இதற்கு தமிழக அரசும் உடந்தை” என்று கூறப்பட் டுள்ளது.

முன்னதாக கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு, சேலம் உருக்காலையை விழுங்கு வதற்கான பெரும் போட்டியில் இருக்கும் ஜிண்டால் ஸ்டீல் நிறுவனம் சேலத்தில் உள்ள கஞ்சமலையின் வடக்குப்பகுதியில் 638 ஏக்கர் பரப்பளவிற்கு ஒரு மில்லியன் டன் இரும்புத்தாது வெட்டியெடுக்கவும், திருவண்ணாமலையிலும் 35 மில்லியன் டன் இரும்புத்தாது வெட்டிக்கொள்ளவும் தமிழக அரசிடம் உரிமம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இத்திட்டத்துக்கு தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வரும் சுற்றுச் சூழல் போராளி சேலம் பியுஷ், எதிர்ப்பு தெரிவித்த நடிகர் மன்சூர் அலிகான், நிலம் கைப்பற்ற வந்த அதிகாரியுடன் சேலம் ஆச்சாங்குட்டப்பட்டி கிராம மக்களுடன் இணைந்து எதிர்ப்பு தெரிவித்த மாணவி வளர்மதி ஆகியோரை காவல்துறை கைது செய்துள்ளது.

அரசின் அடக்குமுறையை கருத்துரிமை பறிப்பை திராவிடர் விடுதலைக் கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது.

# கழகக் களப்பணியாளர்களுக்குப் பாராட்டு

## கொளத்தூர் ஒன்றியத்தில் கிராமப் பரப்புரை தொடங்கியது



திராவிடர் விடுதலைக் கழகம் நடத்தும் கிராம பரப்புரை பயணத் தொடக்க விழா. சேலம் மாவட்டம் கொளத்தூர் ஒன்றியம் உக்கம்பருத்திக் காடு பெரியார் திடலில் 16.06.18 மாலை 6 மணியளவில் துவங்கி நடைபெற்றது. பறை முழக்கத்துடன் தோழர்கள் கிராம மக்கள் அனைவரும் ஊர்வலத்தோடு நிகழ்வு தொடங்கியது.பின்னர் பெரியார் சிலை உடைப்புக்கு எதிர் வினையாக சங்கரமட உடைப்பு வழக்கில் சிறை சென்று திரும்பிய தோழர்களுக்கு மாலை அணிவிக்கப்பட்டு அனைவரும் மேடையில் அமர்ந்தனர்.

சரவணபரத் கடவுள் மறுப்பு ஆத்மா மறுப்பு வாசகங்களை முழக்கமிட மற்றவர் உடன் முழுக்கமிட்டனர். தொடக்க நிகழ்வாக கழக சாதனையாளர்களுக்கான பாராட்டு விழா நடைபெற்றது. சங்கரமட உடைப்பு வழக்கில் சிறை சென்ற நங்கவள்ளி தி.வி.க தோழர்கள் கிருஷ்ணன், மனோஜ், ராஜேந்திரன் ஆகியோருக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி துண்டு அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். மேட்டூர் மகளிர் தின பொதுக் கூட்டத்திற்காக பணி செய்து நிகழ்வை வெற்றிகரமாக நடத்திய தோழர்கள். காயத்திரி, சுதா, சரஸ்வதி, சித்ரா ஆகியோரை வாழ்த்தி பரிசுகளையும் தலைவர் வழங்கினார்.

மேலும் நேப்பாளத்தில் சர்வதேச வில்வித்தை போட்டியில் பங்குபெற்று தங்க பதக்கம் பெற்ற லக்கம்பட்டி குமார் மகன் இனியன் மற்றும் இந்திய தேச அளவிலான தங்கப்பதக்கம் பெற்ற காவை. இளவரசன் மகன் எழிலரசன், கபிலன் ஸ்டுடியோ விஜய் மகன் வளவன் ஆகியோருக்கும் கழகத் தலைவர் பாராட்டி பரசளித்தார்.

பின்னர் மக்களிடையே மண்டிக் கிடக்கும் மூட நம்பிக்கை என்னும் மடமையை ஒழிக்கும் காவை.இளவரசனின் ‘மந்திரமா? தந்திரமா’ நிகழ்வு நடைபெற்றது. கிராமப்புற சிறு குழந்தைகள் முதல் பெரியவர் வரை ரசித்துப் பார்த்து அறிவு விளக்கம் பெற்றனர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி பயணம் குறித்த விளக்க உரை நிகழ்த்தினார்.

**பயண நோக்கங்களான :** 1. பெரியாரியல் கொள்கைகளை பரப்புவது; 2. தமிழகத்தை வஞ்சிக்கும் நாசக்கார திட்டங்களை விளக்குவது; 3. பறிபோகும் கல்வி, வேலை வாய்ப்பு உரிமைகளை குறித்த விழிப்புணர்வை ஏற்ப்படுத்துவது - ஆகியவை குறித்து விளக்கி உரையாற்றினார்.

மேலும் கிராம பரப்புரை கூட்டங்களில் காட்சி படங்களை திரையிடுதல், வீதி நாடகம் , மந்திரமா தந்திரமா உள்ளிட்ட செயல்கள் மூலம் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவது எனவும், எதிர் வரும் பெரியார் பிறந்த நாள் வரை வாரம் இரண்டு கிராம பிரச்சாரக் கூட்டங்களை நடத்துவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த பரப்புரை பயண துவக்க விழா நிகழ்வை உக்கம்பருத்திக்காடு கிளைக் கழகத் தோழர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்தனர்.

## வங்கிகளின் வாராக் கடன்கள் மதிப்பு குறைந்தது ஏன்?

**இந்திய வங்கிகளின் செயற்படா சொத்து மதிப்பு ரூ. 1 லட்சத்து 50 ஆயிரம் கோடி வரை குறைந்துவிட்டது என்று கூறப்படும் நிலையில், 55 சதவிகித வாராக் கடன்களை வங்கிகள் தள்ளுபடி செய்து விட்டதே இதற்கு காரணம் என்பது அம்பலமாகியுள்ளது.2017-18 நிதியாண்டின் டிசம்பர் 31 வரையிலான காலகட்டத்தில் இந்திய பொதுத்துறை வங்கிகளின் செயற்படா சொத்து மதிப்பு ரூ. 1 லட்சத்து 50 ஆயிரத்து 960 கோடி குறைந்துள்ளதாக செய்தி வெளியாகி யுள்ளது. ஆனால் ரிசர்வ் வங்கியின் ஆளுநர் உர்ஜித் படேல் நாடாளுமன்ற நிதிக் குழுவுக்கு வழங்கியுள்ள விவரங்களின் படி, பொதுத்துறை வங்கிகளின் மேற்கூறிய செயற்படா சொத்து மதிப்பில் வெறும் 27 சதவிகித மட்டுமே திருப்பிச் செலுத்தப்பட்ட கடன்கள் எனவும் சுமார் 55 சதவிகித அளவுக்கான கடன்கள், வங்கிகளே பார்த்து தள்ளுபடி செய்து விட்டால் ஏற்பட்ட மதிப்பு குறைவு என்பதும் தெரிய வந்துள்ளது. வராக் கடன் மீட்பு நடவடிக்கை மூலமாக ரூ. 41 ஆயிரத்து 391 கோடி அளவிலான கடன் மட்டுமே மீட்கப்பட்டு இருக்கிறது. ஆனால், ரூ. 84 ஆயிரத்து 272 கோடி மதிப்பிலான கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டு இருக்கின்றன. ரூ. 25 ஆயிரத்து 297 கோடி மதிப்பிலான கடன்கள் செயற்படா சொத்துப் பிரிவிலிருந்து தரம் உயர்ந்துள்ளன.மேலும், முந்தைய வராக்கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், புதிய வராக் கடன்கள் உருவாகி, அது ரூ. 2 லட்சத்து 37 ஆயிரத்து 475 கோடியாக உயர்ந்து விட்டதும் வெளியே வந்துள்ளது.தனியார் துறை வங்கிகளைப் பொறுத்தவரையில் 2018 டிசம்பர் 31 வரையில் அவற்றின் வராக் கடன் ரூ. 46 ஆயிரத்து 91 கோடியாக குறைந்துள்ளது. ஆனால், புதிதாக ரூ. 60 ஆயிரத்து 800 கோடி மதிப்பிலான கடன்கள், வராக் கடன் பட்டியலில் இணைந்துள்ளன. தனியார் துறை வங்கிகளில் மீட்கப் பட்டதாகக் கூறப்படும் வராக் கடனை எடுத்துக் கொண்டாலும், பொதுத்துறை வங்கிகளைப் போல சுமார் 40.2 சதவிகிதம் தள்ளுபடி செய்யப்பட்டவையாகும். உண்மையாகவே திரும்பப் பெறப்பட்ட கடன் 34.2 சதவிகிதம் மட்டும்தான்.வங்கித் துறையில் மோசடிகளின் எண்ணிக்கையும், அதனால் ஏற்பட்ட இழப்பும் கடந்த மூன்று ஆண்டுகளாக அதிகரிக்கத்தான் செய்துள்ளன என்பதும் ஆய்வில் தெரிய வந்துள்ளது. 2015-16 ஆம் நிதியாண்டில் தலா ரூ.1 லட்சத்துக்கும் மேலான 4 ஆயிரத்து 693 மோசடிகள் நடந்துள்ளன. 2017-18 நிதியாண்டில் நடந்த மோசடிகளின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 904.இதன் வாயிலாக இழந்த தொகை மொத்தம் ரூ. 32 ஆயிரத்து 361 கோடியே 27 லட்சமாகும்.இவற்றையெல்லாம் பார்க்கையில், மோடி அரசால் ஒருபோதும் வராக்கடன்களை வசூலித்துக் குறைக்க முடியாது. இப்படி தள்ளுபடி செய்து குறைத்தால்தான் உண்டு. எனவே, வராக்கடன் மதிப்பு குறைந்தது என்பதும் ஒருவகையிலான ஏமாற்று நடவடிக்கையே ஆகும்.**

## ஏற்காடு பெரியாரியல் பயிலரங்கம்

**நாள் : 23, 24 ஜூன் 2018**
**இடம் : ஏற்காடு, சேலம் மாவட்டம்.**

**23.06.2018 சனிக் கிழமை**

| | | |
|---|---|---|
| காலை 10.00 மணி | : | தோழர்கள் அறிமுகம் |
| காலை 11.00 மணி | : | விடுதலை இராசேந்திரன் (பெரியார்- அன்றும்’ இன்றும்) |
| மதியம் 1.00 மணி | : | உணவு இடைவேளை |
| மதியம் 2.00 மணி | : | வீரா கார்த்திக் (கடவுள் மறுப்பு தத்துவமும் - பெரியாரும்) |
| மாலை 3.30 மணி | : | தேனீர் இடைவேளை |
| மாலை 3.45 மணி | : | கொளத்தூர் மணி (இந்துத்துவம் - பெரியார் - அம்பேத்கர்) |
| மாலை 6.00 மணி | : | தனித் திறமை (பேச்சு பயிற்சி, வீதி நாடகம்) |
| இரவு 8.30 மணி | : | இரவு உணவு |
| இரவு 9.15 மணி | : | கலந்துரையாடல் |

**24.06.2018 ஞாயிறு**

| | | |
|---|---|---|
| காலை 7.00 மணி | : | பால்.பிரபாகரன் (இட ஒதுக்கீட்டு வரலாறு) |
| காலை 9.00 மணி | : | காலை உணவு |
| காலை 10.00 மணி | : | சுந்தர் ராஜன், பூவுலகின் நண்பர்கள் ( உலகமயமாக்கலும் சுற்றுச் சூழலும்) |
| மதியம் 12.00 மணி | : | விடுதலை இராசேந்திரன் (களத்தில் திராவிடர் விடுதலைக் கழகம்) |
| மதியம் 2.00 மணி | : | உணவு இடைவேளை |
| மதியம் 2.30 மணி | : | கொளத்தூர் மணி (தமிழர் - திராவிடர் : விளக்கம்) |
| மாலை 4.00 மணி | : | அய்யம்போக்குதல் |
| மாலை 5.00 மணி | : | சான்றிதழ் வழங்குதல். |

இந்த பயிலரங்கத்தில் பங்கேற்க முன்பதிவு அவசியம். புதிய தோழர்களுக்கு முன்னுரிமை. பயிற்சி கட்டணம் ரூ 100 மட்டும். உணவு மற்றும் தங்கும் இடம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தோழர்கள் 23.6.2018 காலை 9 மணிக்குள் அரங்கத்திற்குள் வந்துவிட வேண்டும்.

தொடர்புக்கு : இரா.பிடல் சேகுவேரா, இராசிபுரம் நகரம் நாமக்கல் மாவட்டம். 9788593863

**பால்.பிரபாகரன்**
**பரப்புரைச் செயலாளர்,**
**திராவிடர் விடுதலைக் கழகம்**

# சென்னை மாநாட்டில் கொளத்தூர் மணி பேச்சு

# ‘நீட்’டால் பயன் பெறுவது நகர்ப்புற மேல்தட்டு வர்க்கமே!

*ஏப்ரல் 30, 2018 அன்று பத்ரி நாராயணனின் 14ஆவது நினைவு நாளையொட்டி சென்னை, இராயப்பேட்டையில் நடந்த நிலம் பாழ்-நீர் மறுப்பு- நீட் திணிப்பு, தன்னாட்சி-தன்னுரிமை மீட்பு மண்டல மாநாட்டில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ‘நீட் திணிப்பு’ என்ற தலைப்பில் ஆற்றிய உரை.*

இந்த தன்மானம்-தன்னுரிமை மீட்பு மாநாட்டில் விவாதிப்பதற்கு ஆயிரக்கணக்கான செய்திகளை அள்ளி அள்ளி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் பாரதிய ஜனதா கட்சிக்காரர்கள். 2014ஆம் ஆண்டு அவர்கள் ஆட்சி தொடங்கிய காலத்திலிருந்து மிக வேகமாக இந்த வேலையைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் காங்கிரசு செய்யவில்லையா என்றால் அது நமக்குத் தேவையில்லை. அவர்கள் இருட்டில் திருடிக்கொண்டு போனார்கள். இவர்கள் பேருந்து நிலையத்தில் பட்டப் பகலில் கத்தியைக் காட்டி வெட்டுகிற கொலைகாரர்களைப் போல மிகத் துணிச்சலாக மனிதாபிமானமற்றவர்களாக, எதையும் மதிக்காதவர்களாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

புரட்சியாளர் அம்பேத்கர் மறைவதற்கு ஒரு ஆண்டுக்கு முன்னால், 1955 டிசம்பரில்தான் மொழிவழி மாநிலங்கள் பற்றிய சிந்தனையைப் பதிவு செய்தார். தென்னாடு கல்வியில் முன்னேறியுள்ளது. வடநாடு பின் தங்கியுள்ளது என்று அவர் அதில் சொன்னார். அதை எப்படி சரி செய்வது என்பதற்கு பாரதிய ஜனதா கட்சிக்காரர்கள் வழியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். வடநாட்டைப் போல தென்னாட்டையும் குறிப்பாக தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களை கல்வியற்றவர்களாக மாற்றிவிட்டால் இதைச் சரி செய்து விடலாம் என்பதுதான் அவர்களின் திட்டமாக இருக்கிறது என்பதை நம்மால் பார்க்க முடிகிறது.

நுழைவுத் தேர்வு என்ற பெயரால், நீட் என்ற பெயரால் தகுதியுள்ள மாணவர்களை மருத்துவக் கல்லூரிகளில் சேர்த்து அதன் வழியாக மருத்துவத்தை மேம்படுத்த வேண்டும் என்று கருதியிருப்பார்களேயானால் முதலில் அவர்கள் செய்திருக்க வேண்டியது மத்திய அரசே நடத்திக் கொண்டிருக்கிற கல்வி நிலையங்களில்தான் நீட் தேர்வு நடத்தியிருக்க வேண்டும். எய்ம்ஸ், ஜிப்மர், பி.ஜி.எம்.ஐ. உள்ளிட்ட அவர்கள் நடத்துகிற எந்தக் கல்வி நிலையங்களிலும் நீட் தேர்வு கிடையாது. ஆனால் மாநிலங்கள் நடத்துகிற மருத்துவக் கல்லூரிகளின் சேர்க்கைக்கு மட்டும்தான் நீட் தேர்வு என்ற போதே, இவர்கள் எப்படிப்பட்ட மாணவர்களைத் தேர்ந்தெடுக்கப் போகிறார்கள் என்பதையும், அதற்கு அவர்கள் காட்டுகிற அக்கறையையும், அதில் புதைந்திருக்கிற வஞ்சனையையும் நம்மால் புரிந்துகொள்ள முடியும்.

கல்வியைப் பொறுத்தவரை அவர்களுடைய கொள்கை இட ஒதுக்கீட்டை ஒழித்துவிட வேண்டும் என்பதுதான். அதைச் செயல்படுத்துவதைத்தான் சிந்தனையாகவே கொண்டுள்ளார்கள். நாங்கள் ஒரு புது வகையான இட ஒதுக்கீட்டுக் கொள்கையை கொண்டுவரப் போகிறோம் என்று அவர்கள் தேர்தல் அறிக்கையிலேயே சொன்னார்கள். சமூக நீதி என்று மட்டுமில்லாமல் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கும் இட ஒதுக்கீடு வழங்கப்படும், இது அரசியல் அதிகாரம் கொண்டதாகவும் இருக்குமென்று அவர்கள் தேர்தல் அறிக்கையில் சொன்னார்கள்.

இந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கை குறித்து அப்போது பாரதிய ஜனதா கட்சியின் செய்தித் தொடர்பாளராக இருந்த நிர்மலா சீதாராமனிடம் பத்திரிகையாளர்கள் விளக்கம் கேட்டார்கள். அதற்கு அவர் அளித்த பதில் அடுத்த நாள் இந்துவில் 'No quota, equal opportunity for all' (இட ஒதுக்கீடு இல்லை, எல்லோருக்கும் சம வாய்ப்பு) என்ற தலைப்பில் வெளியானது. எல்லோருக்கும் சம வாய்ப்பு என்று சொன்னால் யாருக்கு அந்த வாய்ப்பு கிடைக்கும் என்பதை நாமே அறிந்து கொள்ளலாம்.

இந்தியாவில் 100 பின்தங்கிய மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து, அந்த மாவட்டங்களை எல்லா வகையிலும் உயர்த்துவதுதான் எங்களுடைய இட ஒதுக்கீட்டுக் கொள்கை என்று அவர்கள் சொன்னார்கள். இப்போது மெல்ல மெல்ல அவற்றையெல்லாம் செயலில் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் ஆட்சிக்கு வந்து சில மாதங்களில் உலக இந்துக்கள் மாநாடு ஒன்றை விசுவ இந்து பரிசத் நடத்தியது. அந்த மாநாட்டில் அவர்களுக்கு எதிரிகளாக சிலரை அடையாளப்படுத்தினார்கள். கிறித்துவர்கள், முஸ்லிம்கள், மதச்சார்பின்மை பேசுகிற நம்மைப் போன்றவர்களை எப்போதுமே எதிரிகளாகச் சொல்லுவார்கள். இப்போது மார்க்சியம் மெக்காலேயிசம் என்ற புதிய எதிரியைச் சேர்த்திருக்கிறார்கள்.



நீட் தேர்வு எப்படி நடத்தப்படுகிறது என்பதைப் பலரும் அறிந்திருப்பீர்கள், அதை விளக்கத் தேவையில்லை. நம்முடைய கல்வி முறையில் மூளையின் படம் வரைந்து, பாகங்கள் குறித்து, செயல்பாடுகளை விளக்கு என்று கேள்விகள் கேட்பார்கள். இவ்வாறு விளக்கி எழுதுகிற (Descriptive Anawer) முறையில்தான் தேர்வு இருக்கும். ஆனால் இவர்கள் இப்போது நீட் தேர்வில் objective முறையைக் கொண்டு வந்து இருக்கிறார்கள். இதில் நான்கு பதிலை அவர்களே அளித்திருப்பார்கள். ஏதேனும் ஒன்றை டிக் செய்தால் போதும். இதற்கெல்லாம் அறிவு வேண்டாம், அதிர்ஷ்டத்தில் கூட வர இயலும் என்பதை சிலர் விளக்கியிருக் கிறார்கள்.

இதுகூட பரவாயில்லை, நம் மாணவர்கள் பார்க்காத புதிய முறை ஒன்றையும் கொண்டு வந்தார்கள். சரியாக எழுதினால் மதிப்பெண், இல்லாவிட்டால் மதிப்பெண் இல்லை என்பதுதான் இதுவரையில் இங்கு இருக்கிற முறை. ஆனால் தவறாக எழுதினால் மதிப்பெண்ணைக் குறைப்போம் என்ற முறையையும் இதில் கொண்டு வந்தார்கள். கேள்வித்தாள்கள் கூட நம் மாணவர்கள் படித்த பாடத் திட்டங்களிலிருந்து கிடையாது. நம் மாணவர்கள் இங்குப் படித்தது சமச்சீர் கல்வித் திட்டத்தில். அதிலிருந்து கேள்விகள் கிடையாது. உயர் ஜாதி, நகரத்துப் பணக்கார மாணவர்கள் மட்டுமே படிக்கிற சிபிஎஸ்சி. கல்வி முறையிலிருந்து தான் கேள்வி கேட்கிறார்கள். உலகின் எந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் இந்த நீட் தேர்வை எழுதலாம். இப்படிப்பட்ட நிலையில்தான் நம் மாணவர்கள் நீட் தேர்வை எழுதுகிறார்கள்.

கடந்த ஆண்டில் இந்தத் தேர்வை எழுதியவர்களில், 6,09,820 இந்தியர்களும், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் 1,826 பேரும், இந்திய வம்சாவளித் தமிழர்கள் 42 பேரும் தேர்வாகியிருக்கிறார்கள். இதில் வெளிநாட்டுக் காரர்கள் 245 பேர் தேர்ச்சியடைந்து இருக்கிறார்கள். நம்முடைய வரிப்பணத்தில் நம் மாணவர்கள் படிக்க நம்முடைய மாநில அரசு கட்டிக்கொடுத்த அரசு மருத்துவக் கல்லூரிகளில் இப்போது நம்முடைய மாணவர்களுக்கு மட்டும் தான் இடம் கிடைக்கும் என்று நிலைமை பறிபோயிருக்கிறது.

ஒருபக்கம் பார்த்தால் தமிழ்நாட்டின் வளங்களுக்காக உழைக்கிற, தமிழ்நாட்டுக் கிராமப்புற மக்களின் குழந்தைகளுடைய மருத்துவர் ஆவதற்கான கல்வி உரிமைகள் பறி போயிருக்கிறது. இது தனிப்பட்ட நபர்களைச் சார்ந்தது. ஆனால் இந்தத் தேர்வை எழுதுபவர்கள் நகரத்துப் பணக்கார வீட்டுக் குழந்தைகள். தனிப்பயிற்சிக்கு பணம் செலுத்த வாய்ப்புள்ளவர்கள்தான் எழுத முடியும் என்ற நிலை வந்துவிட்டது.

“இன்று நம் நாட்டில் உள்ள பரீட்சை முறை என்பது மாணவர்களுடைய அறிவைச் சோதிப்பதாக இல்லை, அவர்களுடைய நினைவு சக்தியைச் சோதிப்பதாகத்தான் உள்ளது. இந்த முறையை மாற்ற வேண்டும்” என்று ஆகஸ்ட், 1925ஆம் ஆண்டிலேயே பெரியார் சொன்னார். காலம் காலமாக மந்திரம் சொல்லுபவனுக்குத்தான் இது வாய்ப்பாக இருக்கும். கல்வியே கண்டிராத நம் மாணவர்களுக்கு இது எப்படிப் பயன்படும்? என்பதுதான் அவருடைய கேள்வியாக இருந்தது. ஆனால் அந்தக் கல்வி முறையையும் மெல்ல மெல்ல உள்வாங்கி அதில் வெற்றி பெறத் தொடங்கினோம். 2016ஆம் ஆண்டு மருத்துவக் கல்லூரி தேர்வில் 200க்கு 200 மதிப்பெண்களை 17 பேர் வாங்கியுள்ளனர். இதில் 2 பேரைத் தவிர மற்ற அனைவரும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். மற்ற இரண்டு பேரில் ஒருவர் இட ஒதுக்கீடு கேட்காத இசுலாமிய தந்தைக்கும், கிறித்துவ தாய்க்கும் பிறந்த திராவிடன் என்ற மாணவர். பெயரைப் பார்க்கும்போதே அவர் யார் என்பது புரிந்திருக்கும். மற்றொருவரும் பார்ப்பனர் இல்லை. நம் மாணவர்கள் 200க்கு 200 பெறுவார்கள் என்ற வாய்ப்பு வந்தவுடன் அவர்களுக்குக் கண்ணை உறுத்துகிறது. இதை எப்படியாவது ஒழித்துக் கட்ட ஒழித்துக் கட்ட வேண்டுமென்று முடிவெடுத்திருக் கிறார்கள்.

கோட்டாவை ஒழிப்பதுதான் எங்கள் கொள்கை என்றார்கள். வரலாற்று ரீதியாக வாய்ப்பு மறுக்கப்பட்ட நம்மவர்களுக்குத்தான் கோட்டா. அதில் வெற்றி பெறுவது ஒருபக்கம். முதலில் அதனால் பலன் பெறுவது யார்? அய்.அய்.டியில் படிக்கின்றவர்கள் யார் என்று பார்க்க வேண்டியுள்ளது. படித்து முடித்தவுடன் அவர்கள் இந்தியாவில் பணியாற்றுகிறார்களா? கல்வி கற்ற பகுதியில் பணியாற்றுகிறார்களா என்றால் கிடையாது. 80 விழுக்காட்டுக்கு மேல் அயல்நாட்டுக்குப் பறந்து விடுகிறார்கள். அப்படிப்பட்ட வர்க்க நிலைகளைச் சேர்ந்தவர்கள்தான் அங்குப் படிக்கிறார்கள்.

அதேபோல இப்போது நீட்டில் தேர்ச்சி பெறுபவர்களும் பெரும்பாலும் அப்படிப்பட்ட வர்க்க நிலைகளைச் சேர்ந்தவர்களாகத்தான் உள்ளார்கள். இவர்களும் வெளிநாட்டுக்குச் செல்லவும், நகரத்தில் மருத்துவமனை நிறுவுவதற்கும் தான் வருவார்களே தவிர கிராமத்திற்கு வர மாட்டார்கள். இன்னொரு பக்கம் சமூகப் பார்வையில் பார்த்தோமானால், நாம் தமிழகம் முழுவதும் தட்டுத்தடங்காமல் பெற்று வந்த மருத்துவ சேவை பறிபோகிறது. கிராமத்து மக்களுக்கு, ஏழை மக்களுக்கு, உழைக்கும் மக்களுக்கு மருத்துவ சேவை எதிர்காலத்தில் மறுக்கப்படப் போகிறது.

நீ மருத்துவரானால் என்ன செய்யப் போகிறாய் என்று அனிதாவிடம் கேட்டார்கள். "எங்க அம்மாவுக்கு போதிய மருத்துவம் கொடுக்க முடியாததால் இறந்து போனார். நான் இந்த ஊரில் மருத்துவமனை கட்டி மருத்துவம் செய்வேன்" என்றார் அனிதா. அரியலூரிலிருந்து எங்கோ தொலைவில் இருக்கிற குழுமூரில் மருத்துவமனை கட்டி அந்தப் பகுதி மக்களுக்கு மருத்துவம் பார்க்க வேண்டும் என்ற சிந்தனை நம் வீட்டுப் பிள்ளைகளுக்குத்தான் இருக்கிறது. இந்த சிந்தனை நகரத்தைச் சேர்ந்த பணக்கார வீட்டுப் பிள்ளைகளுக்கு இருக்குமா?

முதுநிலை மருத்துவம் படிப்பதற்கு நம் அரசு கட்டிய மருத்துவக் கல்லூரிகளில் 50 விழுக்காடு இடங்களை மத்திய அரசுக்கு அளிக்க வேண்டும். இந்த ஆண்டு மத்திய அரசு அந்த 50 விழுக்காடு இடங்களில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடே வழங்கவில்லை. இப்போது அதைப் பற்றி பேசுவதற்குக் கூட இங்கு ஆட்கள் இல்லை. பிற்படுத்தப்பட்டவர்களுக்கு மத்திய அரசில் மிக நீண்ட காலமாக இட ஒதுக்கீடு இல்லாமல் இருந்தது. 1951 முதல் அரசியல் சட்டத் திருத்தமே கல்வி நிலையங்களில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீட்டை வழங்கிவிட்டது.

ஆனால் மத்திய அரசின் கல்வி நிலையங்களுக்கு என்று தனியாக ஒரு சட்டம் 2006ஆம் ஆண்டில் தேவைப்பட்டது. அதுவரைக்கும் மத்திய அரசின் கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு இல்லாத நிலை நீடித்தது. பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு என்பது மண்டல் குழு அமைத்து, விபி சிங் ஆட்சிக்கு வந்த பின்னர்தான் கிடைத்தது. இதற்குக் கிட்டத்தட்ட அய்ம்பது ஆண்டுகள் ஆகிவிட்டது. அதை முழுவதுமாக நிறைவேற்றும் முன்னாலேயே மறுத்துவிட்டார்கள். இப்போது இதர பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீடே இல்லை என்று சொல்லிவிட்டார்கள். என் வீட்டுப் பிள்ளையை தாழ்த்தப்பட்டவன் திருமணம் செய்து கொண்டான் என்று மீசையை முறுக்கும் யாராவது, எந்த ஜாதி சங்கமாவது என்னுடைய ஜாதிக்கு எப்படி இட ஒதுக்கீட்டை மறுத்தாய் என்று பேச முன் வந்தார்களா என்றால் இல்லை. ஜாதி கூடாது, இல்லை என்று பேசுகிற நாம்தான் முன்வந்திருக்கிறோம்.

**(தொடரும்)**

**செய்தித் தொகுப்பு : ர. பிரகாசு**

## ‘சாதியற்ற தமிழர்; காவியற்ற தமிழகம்’ விடுதலை இராசேந்திரன் உரை

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் சார்பில் முடிவெய்திய ‘கலை இலக்கிய ஆளுமைகள்’ கே.பி.பாலசந்தர், டி.ஏ. விசுவநாதன் நினைவுச் சொற்பொழிவு, ஜூன் 15ஆம் தேதி மாலை 7 மணியளவில் சென்னை நுங்கம்பாக்கம் கே.வி.பி. அரங்கில் மாவட்டத் தலைவர் சி.எம்.குமார் தலைமையில் நடந்தது. க.மலர்விழி வரவேற்புரையாற்றினார். கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், ‘சாதியற்ற தமிழர்; காவியற்ற தமிழகம்’ என்ற தலைப்பில் ஒரு மணி நேரம் நினைவு சொற்பொழிவாற்றினார். மாவட்ட தலைவர் சந்தானம், முடிவெய்திய கே.பி. பாலசந்தர், டி.ஏ.விசுவநாதன் தொண்டுகளை நினைவு கூர்ந்தார். முன்னதாக மந்திரமா தந்திரமா நிகழ்ச்சி நடைபெற்றது. கிளை பொருளாளர் வெ.கண்ணன் நன்றி கூறினார்.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## சுவிட்சர்லாந்து நீதிமன்றத்தின் முக்கிய தீர்ப்பு

# விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் அல்ல; விடுதலை இயக்கமே

***விடுதலைப் புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கமல்ல; விடுதலை இயக்கம் என்று சுவிட்சர்லாந்து நாட்டின் கூட்டாட்சி குற்றவியல் நீதிமன்றம் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பை ஜூன் 16, 2018இல் வழங்கியுள்ளது.***

விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு பயங்கரவாத அமைப்பு என்று கூறி இந்த அமைப்புக்கு நிதி திரட்டிய தாகவும், அதில் உறுப்பினர்களாக இருந்து சுவிஸ் நாட்டில் செயல்பட்ட தாகவும், திரட்டிய நிதியில் மோசடி நடந்ததாகவும் குற்றம் சாட்டி 13 ஈழத் தமிழர்கள் மீது கடந்த ஜனவரி 2018இல் சுவிஸ் நாட்டில் வழக்குப் பதிவு செய்தது.

விடுதலைப் புலிகளுக்கு நிதி வழங்கியதால் போர் நடவடிக்கை களை மேலும் தீவிரமாக்கவும், நீண்ட காலம் போர் நடப்பதற்கும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் காரணமாக இருந்தார்கள் என்றும் குற்றப் பத்திரிகை கூறியது. தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு பயங்கரவாத அமைப்பு என்று அரசுத் தரப்பு வழக்கறிஞர்கள் வாதிட்டனர். குற்றம் சாட்டப்பட்ட ஈழத் தமிழர்கள் பெரும் பொருட் செலவில் வழக்கறிஞர் களை நியமித்து வழக்கை நடத்தினர். விடுதலைப் புலிகள் அமைப்பு பயங்கரவாத அமைப்பு தானா என்பது குறித்து நீண்ட விவாதங்கள் நடந்தன. இறுதியில் சுவிஸ் பெடரல் குற்றவியல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு வரலாற்று முக்கியத்துவம் பெற்றுள்ளது. வழக்கில் நீதிமன்றத்தில் விடுதலைப் புலிகள் சார்பில் வைக்கப்பட்ட வாதங்கள்:

விடுதலைப் புலிகளை ஒழிக்கும் நடவடிக்கைக்கு இலங்கை அரசு ‘கலக முறியடிப்பு’ என்று (Counter Insurgency) என்று பெயர் சூட்டியது. இதனுடைய உண்மையான அர்த்தம், ஆயுதம் தாங்கிய போராளிகளை அழிப் பது மட்டுமல்ல; அந்தப் போராளிகள் உருவாக்கிய அரசியலையும் அழிப்ப தாகும். இலங்கை அரசின் அரசியல், நிர்வாகம், ஆயுத அடக்குமுறைகளை எதிர்த்துப் போராடிய விடுதலைப் புலிகள் தங்களுக்கான செயல்படும் தமிழீழ நடைமுறை ஆட்சியையும் நிறுவி இருந்தனர்.

2009ஆம் ஆண்டு தமிழீழ செயல் பாட்டு ஆட்சி முற்றாக ஒழிக்கப்பட்டு மீண்டும், இலங்கை அரசின் மேலாதிக்கம் நிலைநாட்டப்பட்டது. அப்போது நடந்த இராணுவ மற்றும் அரசியல் (திணிப்பு) நடவடிக்கை களால் தமிழர்கள் புலம் பெயர்ந்து வேறு நாடுகளுக்கு குடியேறினார்கள். அப்படி குடியேறிய புலம் பெயர்ந்த தமிழர்களிடம் நிலை பெற்றிருந்த தங்களுக்கான ‘தாயகம்’ என்ற கோட் பாட்டை அழிக்க முடியவில்லை. அதன் காரணமாகவே புலம் பெயர்ந்த தமிழர்கள் மீதும் ‘கலக முறியடிப்பு’ நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. புலிகள் இயக்கத்தில் உறுப் பினராக இருந்தது; அதற்காக நிதி திரட்டுவது போன்ற நடவடிக்கைகள் குற்றச் செயல்களாக கருதி வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இந்த ‘கலக முறியடிப்பு’ நடவடிக்கையின் கீழ்தான் வருகிறது இந்த வழக்கு.

இந்தப் பிரச்னையில் சுவிட்சர் லாந்து அரசு கடந்த காலங்களில் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவான நிலைப்பாடுகளையே மேற்கொண்டு வந்திருக்கிறது. 24.12.2000 அன்று விடுதலைப் புலிகள் போர் நிறுத்தம் அறிவித்து அதற்குப் பிறகு மூன்று முறை நீடித்த பிறகும்கூட இலங்கை அரசு இந்தப் போர் நிறுத்தத்துக்கு முகம் கொடுக்கவில்லை. ஒரு கட்டத்தில் கட்டுநாயக்கா மற்றும் பண்டார நாயக்கா விமான நிலை யங்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்திய பிறகுதான், இலங்கை அரசு போர் நிறுத்தம் செய்ய முன் வந்தது. போர் நிறுத்தம் வருவதற்குக் காரணமே தமிழர் தரப்பில் மேற்கொண்ட முயற்சிகள் தான். அதற்குப் பிறகு இரு தரப்புக்கும் நடந்த பேச்சு வார்த்தைகளுக்கும் இந்த முயற்சியே அடிப்படையாக அமைந்தது. இந்தச் சூழ்நிலையில் சமாதான செயல்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதே சுவிஸ் அரசின் நிலைப்பாடு என்பதால், தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாகக் கருதி தடை விதிப்பது தவறான முடிவு என்று சுவிஸ் அரசு நிலைப்பாட்டை அப்போது எடுத்தது. 2005 மற்றும் 2007ஆம் ஆண்டுகளில் சுவிஸ் பெடரல் வழக்கறிஞர் சங்கம் (அரசுத் தரப்பு சட்டத் துறை) இதை வெளிப்படையாகவே தெரிவித்தது.

‘சுனாமிப்’ பேரழிவு வந்தபோது விடுதலைப் புலிகள் தமிழீழப் பகுதியில் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு இலங்கை அரசுடன் இணைந்து செயல்பட முன் வந்த நிலையில் அமெரிக்காவில் ‘வாஷிங்டன்’ நகரில் நடந்த நன்கொடையாளர்கள் மாநாட் டில் ஈழத் தமிழர் பிரதிநிதிகளைப் பங்கேற்க விடாமல் இலங்கை அரசுடன் சேர்ந்து, அமெரிக்க- அய்ரோப்பிய நாடுகள் சதி செய்து, விடுதலைப் புலிகள் மீது அய்ரோப்பிய ஒன்றியம் தடைவிதிக்கச் செய்தார்கள். 2008ஆம் ஆண்டு இலங்கை அரசு போர் நிறுத்தத்திலிருந்து விலகிக் கொண்டது. 2009ஆம் ஆண்டில் போர் மிகவும் கடுமையானது. இந்தக் கால கட்டங்களில் சுவிஸ் அரசு மவுனம் காத்தது. ஆனால் இப்போது புலிகள் பயங்கரவாதிகள்; அதற்கு நிதி திரட்டுவது குற்றம் என்று வழக்குப் பதிவு செய்துள்ளது.

சுவிஸ் நாட்டுக்கு புலம் பெயர்ந்து வந்த தமிழர்களை ‘இலங்கை குடி மக்கள்’ என்றே அங்கீகரித்து இடப் பெயர்வு தொடர்பான உடன்படிக்கை யில் இலங்கை அரசுடன் கையெழுத் திட்டது சுவிஸ் அரசு. இதன் மூலம் இவர்களின் ‘தமிழர்’ என்ற அடை யாளத்தை மறுத்தது. அது மட்டு மின்றி இலங்கை அரசுடன் சட்ட உதவிகள் பற்றிய கூட்டு செயல்பாடு களுக்கு சம்மதித்து, இந்த 13 ஈழத் தமிழர்கள் வழக்கு தொடர்பான ஆவணங்களையும் இலங்கைக்கு சுவிஸ் நாடு பெடரல் சட்ட அமைச்சகம் வழங்கியது.

2005, 2007ஆம் ஆண்டுகளில் விடுதலைப் புலிகள் குறித்த சரியான நிலைப்பாடுகளை எடுத்த பெடரல் அமைச்சக வழக்கறிஞர்களாக இருந் தவர்கள் இப்போது அப்பதவிகளில் இல்லை. மாறாக இப்போது இந்தத் துறையில் அதிகாரமிக்கவராக இருப்பவர் சர்வதேச நிதியம் (அய்.எம்.எஃப்) மற்றும் உலக வங்கி யுடன் பல வேலைத் திட்டங்களில் இணைந்து செயல்பட்டவர். இந்த அமைப்புகள் விடுதலைப் புலிகள் ஒடுக்கப்பட வேண்டும் என்ற கருத்துடன் செயல்பட்டதை ‘விக்கி லீக்ஸ்’ அம்பலப்படுத்தியிருக்கிறது என்று விடுதலைப் புலிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் வாதங்களை முன் வைத்தனர். வரலாற்று நிகழ்வுகளோடு இதைப் பரிசீலித்த நீதிபதி - இலங்கை யில் நடந்த போராட்டத்தை பயங்கர வாதம் என்றோ, தீவிரவாதிகள் போராட்டம் என்றோ கூற முடியாது. அது ஒரு விடுதலைப் போராட்டம். விடுதலைப் புலிகள் இயக்கம் ஆயுதம் ஏந்தியப் போராட்டத்தை மட்டும் நடத்தவில்லை. அரசியல் இயக்கத் துக்கான கட்டமைப்பு செயல்பாடு களையும் கொண்டிருந்தது. பெண் களையும் உள்ளடக்கிய அவர்களது இராணுவ அமைப்பு முறையாக ஒழுங்கமைக்கப்பட்டு, ஒரு இராணு வத்துக்குரிய அனைத்து அம்சங் களையும் கொண்டிருந்திருக்கிறது.

கரும்புலிகள் ஒரு தற்கொலைப் படை என்று பொதுவெளியில் பேசப் பட்டாலும், அது ஒரு விசேடப் படைப் பிரிவாகவே கருத வேண்டும். விடுதலைப் புலிகள் தங்கள் பகுதியில் ஒரு நிழல் அரசையும் ஏற்படுத்தி நடைமுறைப் படுத்தியிருக்கிறார்கள். எனவே விடுதலைப் புலிகள் ஒரு விடுதலை இயக்கமே தவிர, பயங்கரவாத அமைப்பு என்று கூற முடியாது. குற்றம்சாட்டப்பட்ட நான்கு பேர் வழக்கிலிருந்து விடுவிக்கப் படுகின்றனர். அவர்களுக்கு இந்த வழக்கு தொடர்ந்ததற்காக அரசு இழப்பீடு வழங்கவும், நீதிமன்றம் உத்தரவிடுகிறது. ஏனைய குற்றம் சாட்டப்பட்டவர்கள் வங்கி மோசடி யில் தெரிந்தே ஈடுபட்டுள்ளதால் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படு கிறது. இரண்டு ஆண்டுகள் அவர்கள் நன்னடத்தையை நிரூபிக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தார் நீதிபதி.

அரசுத் தரப்பு வழக்கறிஞர் திருமதி நோத்தோ, விடுதலைப்புலிகள் ஒரு பயங்கரவாத அமைப்பு என்பதை நிரூபிக்க சமர்ப்பித்த பல ஆவணங் களை நீதிமன்றம் ஏற்க மறுத்து விட்டது. இந்த ஆவணங்கள் வழக் கிற்குப் பொருந்தாதவை என்றார் நீதிபதி.

ஏற்கனவே இத்தாலியின் நாப் போலி மாநகர நீதிமன்றம், டென்மார்க் உயர்நீதிமன்றம், அய்ரோப்பிய நீதிமன்றம், விடுதலைப்புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கமல்ல என்று தீர்ப்பளித்த நிலையில் இப்போது சுவிஸ் நாட்டின் தீர்ப்பும் வந்துள்ளது.

## தமிழ்நாடு மாணவர் கழகம் நடத்தும் பயிற்சி வகுப்பு

**நாள் : 30.6.2018, 1.7.2018 (சனி, ஞாயிறு)**
**இடம் : மக்கள் மன்றம், காஞ்சிபுரம்**

**முதல் நாள் 30.06.2018 சனிக் கிழமை**

| | |
|---|---|
| காலை 9.30 மணி | : தோழர்கள் அறிமுகம் |
| காலை 10 - 1 மணி | : பிரின்ஸ் கசேந்திர பாபு (கல்வி -நம்முன் உள்ள சவால்கள்) |
| மதியம் 1 - 2 மணி | : உணவு இடைவேளை |
| மதியம் 2- 3.30 மணி | : தேவா (மாணவர்களின் திறன் மேம்பாடு) |
| மாலை 4- 5.30 மணி | : விடுதலை இராசேந்திரன் (தனியார் துறையில் இடஒதுக்கீட்டின் தேவை) |
| மாலை 5.30 - 6.30 மணி | : இன்றைய பயிற்சி வகுப்பு குறித்து தோழர்கள் கலந்துரையாடல் |

**இரண்டாம் நாள் : 01.07.2018 ஞாயிறு**

| | |
|---|---|
| காலை 10 - 1.00 மணி | : மருத்துவர் எழிலன் (மூட நம்பிக்கை) |
| மதியம் 1 - 2.00 மணி | : உணவு இடைவேளை |
| மதியம் 2 - 4.00 மணி | : கொளத்தூர் மணி (இடஒதுக்கீடு வரலாறு) |
| மாலை 4 - 500 மணி | : தோழர்கள் கலந்துரையாடல் |

நுழைவுக் கட்டணம் : ரூ.200/-

**தமிழ்நாடு மாணவர் கழகம்**
**9688310621 / 9884671133**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஓய்வுப் பெற்ற நீதிபதியும் மாநாட்டிற்கான தலைமை வகித்தவருமான து.அரிபரந்தாமன் அவர்கள் பேசுகையில்,

“இந்தியாவின் இன்றைய அடக்குமுறை அரசாங்கத்தின் விளைவாக எவ்வாறெல்லாம் தேசிய இனங்கள் சிக்கலுக்கு உள்ளாகின்றன என்றும் இத்தகைய போக்கு தொடருமாயின் அது தேசிய இனங்களின் விடுதலைக்கான பாதையை திறந்து விடும். அப்படி, தமிழ்நாடும் விடுதலை பெற்று தனிநாடாக உருவாகும் நிலையில், அந்நாட்டில் சாதியற்ற சமத்துவம் உருவாக இன்றிலிருந்தே அதற்கான திட்டமிடலை நாம் உருவாக்க வேண்டும்” என எடுத்தியம்பினார்.

மாநாட்டு சிறப்பு பங்கேற்பாளர்களாக, திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி, தமிழ்த்தேசியப் பேரியக்கத்தின் பொதுச்செயலாளர் கி.வெங்கட்ராமன், நாம் தமிழர் இயக்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் உள்ளிட் டோர் கலந்துகொண்டு உரையாற்றியோருக்கு நினைவுப்பரிசை வழங்கியதோடு மாநாடு சிறப்புற நடந்தேறத் துணை நின்றனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 22nd June 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN